TVEC

# ஒழுக்கநெறிக் கோவை

## தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்களுக்கு





# அறிமுகம்

ஒழுக்கநெறிக் கோவையானது, ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள நபரின் தொழில்முறை நடத்தையை வரையறுக்க உதவியாக அமைவதுடன், அது பொதுமக்களையும் வாண்மைத் தொழிலையும் பாதுகாக்க துணை புரிகின்றது. ஒழுக்க நெறிமுறைசார் நடவடிக்கை, தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பில் தீர்மானமெடுத்தல் மற்றும் வாண்மைத் தொழில்சார் பயிற்சிக்கும், ஒழுக்க நெறிமுறைக் கோவையில் முன்வைக்கபபட்டுள்ள கோட்பாடுகள் வசதியளிப்பு செய்கின்றன. அதேபோன்று ஒழுக்கநெறிசார் நடவடிக்கைக்கு வெளிப்படைத்தன்மையை வழங்குகின்றது.

இந்த ஒழுக்கநெறிக் கோவையானது தொழில்முறை செயற்பாட்டாளர்களுக்கு வழிகாட்டியாகவும், பெறுமதிமிக்க வளமாகவும் வடிவமைக்கப்பட்டதாகும். இது விரிவான பரப்புக்கள் உள்ளடங்கும் வகையிலும் சிக்கலான நிலமைகளை தவிர்க்கும் வகையிலும், எந்தவொரு சூழ்நிலைக்கும் பொருந்தக்கூடிய எண்ணக்கருக்களின் தொகுப்பாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட செயற்பாடானது ஒழுக்க நெறிக்கோவை விதிகளுக்கமைவானதா இல்லையா என்பது தொடர்பாக கேள்வி எழுமாக இருந்தால், அந்த நடத்தையை மதிப்பிடுவதற்கு தகுதியான நபரின் அறிவுறுத்தலை ஆலோசனையை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் உங்களுக்கு அது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால், தொழில்வாண்மை ஆலோசனையின்றி மேலதிக நடவடிக்கை எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

எப்போதும் சகபாடிகளின் விமர்சனக் கருத்துக்கள் சரியான ஆலோசனையாக இருக்காது. ஆனாலும் அவ்வாறானதொரு தீர்மானமெடுத்தல் அல்லது குறிப்பிட்டவகையான செயற்பாட்டுக்கு முன்னரான ஒரு தீர்மானம் அல்லது குறித்த ஒரு நடத்தையின் ஒழுக்க நெறிமுறை தொடர்பாக ஏனையவர்கள் கருத்துக்களை வழங்குவதற்கு நீங்கள் அனுமதிக்கலாம். நீங்கள் எந்தவோரு வகையான செயற்பாட்டிலும் ஈடுபடுவதற்கு முன்னர் அவ்வாறான உள்ளுணர்வுகளுக்கு செவிசாய்க்கலாம். மேலும் உங்களுக்குத் தேவையான பலமும் பாதுகாப்பும் உங்களது ஆழ்மனதில் இருக்கின்றது.

## தொழில்வாண்மைத்துவ பெறுமானங்கள் மற்றும் எண்ணக்கருக்கள்

தொழில் வாண்மைத்துவ பெறுமானங்கள் ஒரு நபரின் ஒழுக்க நெறிமுறை சார் நடத்தைக்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது. தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் பின்வரும் தொழில்சார் பெறுமானங்கள் மீது கவனம் செலுத்தல் வேண்டும்.




இந்த தொழில்வாண்மைசார் பெறுமானங்கள் பின்வரும் ஒழுக்கநெறிசார் எண்ணக்கருக்களுக்கு கோட்பாடு சார் அடிப்படையொன்றை வழங்குகின்றது. இந்தக் எண்ணக்கருக்கள் ஒழுக்கநெறிசார் நடத்தைகள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

## தொழில்வாண்மைசார் ஒழுக்கநெறி நடத்தைகளுக்கான அடிப்படை கோட்பாடுகள்;

- சுய கட்டுப்பாடு அல்லது ஒருவரது வாழ்க்கையின் செல்நெறியை நிருவகிக்கும் உரிமையை மேம்படுத்தல்.

- உள சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதன் மூலம் ஒரு நபரதும் சமூகத்தினதும் நன்மைக்காகவும் உற்பத்தித் திறனுடன் பணியாற்றுதல்.




- எல்லோரையும் சம நிலையில் நடத்துதல்.

- வாண்மைத் தொழில் சார் தொடர்பினை பேணுவதில் வகைகூறல், கருத்துகளுக்கு மதிப்பளித்தல், நம்பிக்கையாக இருத்தல், பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான வாக்குறுதிகளை மதித்தல் .

- தொழில்சார் வழிகாட்டல் தொழில் வல்லுநர்களிடம் வருகின்ற ஒவ்வொரு சேவைநாடிகளுடனும் நேர்மையாக நடந்து கொள்ளல்.

## இந்த ஒழுக்கநெறிக் கோவை பிரதானமாக 05 நோக்கங்களை நிறைவேற்றுவதை.

**01**

தற்போது தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் தொழிலுடன் இணையும் நோக்கமுள்ள தொழில்வாண்மையாளர்களின், ஒழுக்கநெறி சார்ந்த பொறுப்புகளை விளக்குகின்றது.

**02**

வாண்மைத் தொழிலின் பணிகளை உரியவாறு நிறைவேற்றுவதற்கு இது பங்களிப்பை வழங்குகின்றது.

**03**

ஒழுக்கநெறிசார் பிரகாரம் நடத்தையினை வரைவிலக்கணம் செய்கின்ற கோட்பாட்டுக் கோவையாகவும் இது செயற்படுகின்றது.

**04**

தொழில்வாண்மைசார் அபிவிருத்தி செயற்பாட்டினை வகுப்பதற்காக இது பங்களிப்புச் செய்வதுடன், அதன் மூலம் சேவை நாடிகளுக்கு வழங்கும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காக வாண்மைத்தொழிலில் உள்ள தொழில்சார் பெறுமானங்களுக்கு வழிகாட்டலை வழங்குகின்றது.

**05**

இந்த சேவை நாடிகளது தேவையினை அடையாளம் காணுதல் மற்றும் தொழில்வாண்மையாளர் ஒருவராக சேவை நாடிகளின் உரிமைகள் மற்றும் அது தொடர்பில் தொழில்வாண்மையாளர் ஒருவரின் பொறுப்புகளை புரிந்துக்கொள்வதற்கும் இது பங்களிப்பை வழங்குகின்றது.

## வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலின் வரலாற்று அபிவிருத்தி

வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் என்பது முற்காலத்திலிருந்து கவனம் செலுத்தப்பட்ட விடயமாகும். 1983 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பயிற்சி நிறுவனம் மருதானையில் புகையிரத நிலைய முன்றலில் அமைந்திருந்த கோப்பி களஞ்சியக் கட்டிடத்தில் சிறிய தொழிற்சாலை, ஆராய்ச்சி கூடம், போதனா மண்டபம் மற்றும் 25 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் தொடக்கம் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி துறையின் கவனம், வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவை மீது குவிக்கப்பட்டிருக்கின்றது. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலானது இலங்கை கல்வி முறைமையில் விரிவாக கவனத்தில் கொள்ள வேண்டிய துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அது கல்வி , பயிற்சி மற்றும் தொழிற் சந்தை என்பவற்றுக்கிடையில் உள்ள இடைவெளியை குறைப்பதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான அம்சமாக அரச சபை நடைமுறையில் இருந்த 1930 ஆம் ஆண்டிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன்படி கல்வி அதிகாரிகள் திறன்கள் பயிற்சியின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு, அதனை பாடசாலை முறைமையில் பாடவிதானத்தில் உள்ளடக்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள்.

பாடசாலை முறைமையினுள் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் 1957 இல் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் மூலம் முறையாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அதன்போது வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் மீது முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய துறையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது தொழில்நுட்ப பாடம் கற்பித்தல், மாணவர்களின் தகவல்களை பராமரித்தல் ஆகிய முறைமைகளை அறிமுகப்படுத்திய போதும், அது கல்வி முறைமையில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தொழில்சார் பாடங்களை உள்ளடக்கி 1970 ல் தொழில்நுட்பக் கல்வி முறைமை மாற்றத்துக்குள்ளானது. அம்மாற்றமும் பின்னர் கைவிடப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் மதிப்பிடல், வழிகாட்டுதல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைகள் தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. தற்போதும், வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவை 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டில் மீண்டும் இற்றைப்படுத்தப்பட்ட 16 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் நடைமுறைப்படுவதுடன், குறித்த சேவை ஒவ்வொருவரது வழிகாட்டலுடன் முன்னெடுத்துச் செல்லப்பட்டு மாணவர்களின் எதிர்கால தொழில் சந்தைக்கு பொருத்தமான வகையில் தயாரிப்பதற்காக வழிகாட்டல் சேவையாக நடைமுறைப்படுகின்றது.

அதேபோன்று தொழில்நுட்ப தொழில்சார் கல்வி பயிற்சி துறையிலும் ஆரம்ப கட்டத்தில் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவைக்காக நடைமுறைப்பட்ட முறைமைகளில் வளர்ச்சியானது 1990 ஆம் தசாப்த காலத்தின் இறுதி பகுதியில் காணப்பட்டதுடன், வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்தும் பொருட்டு பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்யவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி பாடசாலை முறைமையில் நடைமுறைப்படும் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவைக்கு இணையாக, தொழில்நுட்ப தொழில்சார்

கல்வி சேவையில், வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவை நடைமுறைப்படுகின்றது.

அதேபோன்று தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி பயிற்சி துறையில் நடைமுறைப்படுகின்ற வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவைக்கு மேலதிகமாக அரச முறைமையினுள் கல்வி அமைச்சு, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், பல்வேறு கல்வி நிறுவனங்கள், அரசு சாராத அமைப்புகள், வேறு நிறுவனங்கள் போன்ற நபர்களாலும் தொழில்சார் வழிகாட்டல் சேவை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறித்த முழுமொத்த வழிகாட்டல் சேவை வழங்குகின்ற முறைமையை ஒழுங்குறுத்துவதற்காக 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க சட்டம் மூலம் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற்க்கல்வி கல்வி ஆணைக்குழுவின் 1999 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தில் 3(J) பிரிவு மூலம் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி சென்று வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல்களை வழங்கும் எல்லா நிறுவனங்களதும் பங்களிப்புடன் தேசிய வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் ஒழுங்குறுத்தல் குழு 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், குறித்த குழுக்களின் பிரேரணைகள் படி வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவை ஒழுங்குறுத்தல் மற்றும் தரப்படுத்தலுக்கு (Standardization) தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாழ்க்கைத்தொழில் தொழில்சார் வழிகாட்டல் சேவையை மிகவும் பயனுள்ளதாக உயர் தரத்துடன் செயற்படுத்துவதற்காக அச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள், வாண்மைத்தொழில் ஒழுக்கநெறிக் கோவையுடன் இணைந்திருத்தல் வேண்டுமென்பதுடன், அதன்மூலம் சேவையினை நடைமுறைப்படுத்துகின்ற தொழில் வாண்மையாளர்களினதும் சேவைநாடிகளினதும் அபிவிருத்தியை அடைந்து கொள்ளலாம்.

## இவ்விடயங்களை கவனத்தில்கொண்டு எமது நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட ஒழுக்கநெறிக்கோவை நான்கு அடிப்படைகளை உள்ளடக்குகின்றது.

### சேவைநாடியின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதித்தல்

வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் தொழில்வாண்மையாளர்கள், சேவைநாடிகளின் அடிப்படை உரிமைகள், ஒழுக்கம் சார்ந்த மற்றும் கலாச்சார பெறுமதிகள், தனிநபர் அபிமானம் மற்றும் பெறுமானங்கள் என்பன மதிக்கப்படல் வேண்டும். நடைமுறையிலுள்ள சட்டங்களின்படி சேவை நாடியின் அந்தரங்க உரிமைகள் இரகசியத்தன்மை, தனியுரிமை, விசுவாசம், சுய உறுதிப்பாடு மற்றும் சுயாதீனம் என்பவற்றுக்கு மதிப்பளித்தல். மேலும் முடியுமானளவு சிறப்பாக சேவைநாடியை செயற்ப்பாட்டாளர் புரிந்து கொள்வதோடு, சேவைநாடியால் முன்வைக்கப்படும் எவ்வாறான தொழில் தீர்மானங்கள் தொடர்பிலும் உடன்பாடு ஒன்றுக்கு வருதல்.

## தேர்ச்சி

தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்களின் தொழில்சார் தேர்ச்சியினைப் பராமரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல் என்பன சுயமாகவே மேற்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் அவர்களது ஆற்றலின் தேர்ச்சி எல்லைகளை அடையாளம் கண்டு, சுய பாதுகாப்பில் ஈடுபடுதல் வேண்டுமென்பதுடன், அவர்களது பணியின் தரத்தினை பேணுவதற்காக உதவி மற்றும் மேற்பார்வை என்பனவற்றை தேவையான வகையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும் அவர்கள் கல்வி, பயிற்சி மற்றும் அனுபவம் என்பவற்றுக்கான சான்றிதழ் அல்லது தகைமைகளின் அடிப்படையில் மட்டும் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

## தொழில்சார் பொறுப்பு

தொழில்சார் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் சேவைநாடிகள் தொழில்சார் சகபாடிகள் அவர்கள் பணியாற்றும் மற்றும் வாழ்கின்ற சமூகத்தின் மீது விசுவாசமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பொறுப்பு வாய்ந்த வகையிலும் பணியாற்றுவதற்கு. அவர்களின் தொழில்வாண்மைசார் பொறுப்புகள் பொறுப்பு தொடர்பாக அறிந்திருத்தல் வேண்டும். அவர்கள் தீங்கு விளைவிப்பதை தவிர்த்து, அவர்களின் தொழில்வாண்மைசார் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பை ஏற்று, ஒழுக்க முறையில் பிரச்சினைகள் மற்றும் தர்மசங்கடங்களை தீர்ப்பதற்கு முறையான அணுகுமுறைகளை கையாளுதல் வேண்டும்.

## நேர்மை மற்றும் நம்பகத்தன்மை

தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் எப்போதும் நேர்மையை நிலைநாட்டுவதற்கு பாடுபடுவார்கள். அவர்கள் தங்கள் தொழிலை சரியாக பிரதிநிதிப் படுத்துவதுடன், மற்றவர்களிடம் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்வார்கள். அவர்கள் கருத்து வேறுபாடுகள் தொடர்பாக புரிந்துக்கொண்டும் முனைப்பாக செயற்படுவதுடன் மற்றவர்களின் நம்பகத்தன்மையை துஷ்பிரயோகம் செய்வதைத் தவிர்ப்பார்கள். தொழில்சார் சகபாடிகளின் பொருத்தமற்ற நடத்தைகள் தொடர்பாகவும் விழிப்புடன் இருப்பார்கள்.

இந்த நான்கு அடிப்படைகளையும் மேலும் விபரிப்பதற்கு நடத்தைசார் காரணிகளை விருத்தி செய்வதன் ஊடாக ஒழுக்கநெறிக்கோவை தொடர்ந்தும் கலந்துரையாடப்படுகின்றது. இந்த சேவைகளை வழங்கும்போது அனைத்து வகையிலும் நடத்தைகள் மற்றும் ஒழுக்க நெறிகளுக்கு உட்பட்டவகையில் தொடர்ந்து செயற்படுவதற்கு உறுதியளிப்பார்கள்.




ஒழுக்கநெறிக்
கோவை

# சேவைநாடியின் உரிமை மற்றும் அபிமானம் என்பவற்றுக்கு கௌரவமளித்தல்

வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அடிப்படை உரிமைகள், ஒழுக்கநெறி மற்றும் கலாச்சார பெறுமானங்கள், தனிநபர் அபிமானம் மற்றும் பெறுமதி என்பவற்றுக்கு கௌரவமளிக்கின்றார்கள். நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைவாக தனிநபர் அபிமானம், இரகசியத்தன்மை, சுய தீர்மானம், மற்றும் சுயாதீனம் என்பவற்றுக்கான சேவைநாடிகளின் உரிமைகளுக்கும் அவர்கள் கௌரவமளிக்கின்றார்கள். மேலும் சேவைநாடிகள் முன்மொழிகின்ற எந்தவொரு வாழ்க்கைத்தொழில் தீர்மானம் தொடர்பாகவும் உடன்பாட்டுக்கு வருவதுடன் சேவைநாடியை இயன்ற வரை சிறப்பாக வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர் புரிந்து கொள்வார்.

## 1.1. பொது மரியாதை

1.1.1. சேவைநாடிகளின் ஒழுக்கநெறி மற்றும் கலாசார விழுமியங்களின் மீது நெகிழ்ச்சியான கவனத்தை காட்டுதல் வேண்டும். பாலினம் பெண்/ஆண், பாலின நோக்குநிலை, மாற்றுத்திறன், மதம்/நம்பிக்கைகள், இனம், சாதி, வயது, தோற்றம், கட்சி அரசியல், சமூக அந்தஸ்த்து வகுப்பு போன்ற காரணங்களால் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்களது சேவை வேறுபடுவதற்கு இடமளித்தலாகாது.

1.1.2. சேவைநாடியைப் பாதிக்கும் தீர்மானங்கள் எடுக்கும்போது முடியுமான அளவு செயற்றிறனான பங்களிப்பை வாண்மையாளர் பெற்றுக் கொள்வார்.

1.1.3. சேவைநாடிகள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் சோதனைகள் மற்றும் மதிப்பீடுகளின் தன்மை, குறிக்கோள்கள் மற்றும் விளைவுகள் தொடர்பான முழு விளக்கத்தைக் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

1.1.4. ஆய்வு மற்றும் மதிப்பீடுகளில் ஈடுபடும்போது, பங்கேற்பாளர்களின் கண்ணியம், தனிநபரின் தனியுரிமை மற்றும் நலனைப் பாதுகாக்க வேண்டும்.

## 1.2. தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மை

1.2.1. சேவைநாடிகளின் கலந்துரையாடல்கள் தொடர்புடைய தனியுரிமை நிலைமைகளுக்குள் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு நியாயமான நடவடிக்கையும் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் மேற்கொள்வார்.

1.2.2. சேவைநாடிகளின் உளவியல் சகிப்புத்தன்மையை விஞ்சி துன்பத்துக்கு உள்ளாக்குவதைத் தவிர்ப்பார்.

1.2.3. சேவைவழங்கல் நடவடிக்கைகளின் போது பெறப்பட்ட சேவைநாடிகள் தொடர்பான தகவல்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்க ஒவ்வொரு சாத்தியமான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். சேவைநாடிகள் தொடர்பான தகவல்களை யாருடனும் விவாதிக்கப்பட்டால், அது வாண்மைத்துவ நோக்கங்களுக்காக மட்டுமாகவே இருக்க வேண்டுமென்பதுடன், அதனை ஆலோசனைகள் பெறுவதற்கு தகுதி மற்றும் அனுமதி உள்ளவர்களுடன் மட்டும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.2.4. ஏற்புடைய இரகசியத்தன்மை தொடர்பான கட்டுப்பாடுகள் இருந்தால், அவை பற்றி சேவைநாடிகளுக்கு விளக்கமளித்தல் வேண்டும்.

1.2.5. தொழில்சார் சகபாடிகள், நேர் வரிசை முகாமையாளர்கள் மற்றும் அவர்களுடன் பணிபுரியும் ஏனையோர், இரகசியத்தன்மையின் அவசியத்தைப் புரிந்துகொண்டு மதிக்கிறார்கள் என்பதை உறுதி செய்யவதற்கான அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.2.6. மனோ ரீதியான பரிசோதனைகளின் பெறுபேறுகள் அடங்கலாக தகவல் தொடர்புகளின்போது அந்தத் தகவல்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான பொருத்தமான செயற்பாடுகள், தவறான பொருள்கோடல்/தவறாக பயன்படுத்துவதற்கு காரணமாகும் தகவல்கள் பதிவு செய்வதை தவிர்ப்பது, யூகம் செய்வதை தவிர்ப்பது மற்றும் ஒரு சேவைநாடியை புரிந்துகொள்ளக்கூடிய மொழியைப் பயன்படுத்தல் என்பன உள்ளடங்கும். (4.1.3 பிரிவை பார்க்கவும்)

1.2.7. போதியளவிலான அறிக்கைகளை வைத்துக் கொள்வதன் முக்கியத்துவம் அடையாளம் காணுதல் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்களை வகுத்தல் (உதா: தரவுகளை பாதுகாத்தல், தகவல்களை அறிந்துக்கொள்ளும் சுதந்திரம்) எழுத்து அல்லது இலத்திரனியல் ஆகிய இரண்டு வடிவங்களிலும் சேவைநாடிகளின் அறிக்கைகளை களஞ்சியப்படுத்தல், பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்கான எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.2.8. சேவைநாடிகளின் வேலைகள் தொடர்பாக தேவையான மற்றும் போதியளவிலான அறிக்கைகளை பெற்றுக்கொண்டு அவற்றை தேவையான காலப்பகுதி வரை களஞ்சியப்படுத்தி பராமரித்தல் வேண்டும்.

## 1.3. சுயாதீனத்துக்கான உரிமை மற்றும் அவ்வாறான உரிமைகளுக்கு மதிப்பழித்தல்

1.3.1. உத்தேச இடையீடுகள் தொடர்பில் சேவைநாடிகளின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்காக எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். (சேவைநாடி பராயமடையாதவர் எனில் பெற்றோரின் பாதுகாவலரின் விருப்பமும் தேவைப்படலாம், பாடசாலையின் சேவை நிலையத்தில் தாபிக்கப்பட்ட கொள்கைகளும் ஏற்புடையதாகலாம்)

1.3.2. வழிகாட்டல் செயற்பாடு/இடையீடு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் குறித்த ஒப்புதலை விலக்கிக்கொள்வதற்கு சேவைநாடிக்குள்ள உரிமையை பாதுகாத்தல் வேண்டும்.

1.3.3. சேவைநாடிகளின் தகவல்களை, அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் வெளியிடப்பட வேண்டும். ஆயினும் அத்தகைய தகவல்களை மறைப்பது சேவைநாடிகளுக்கு அல்லது வேறு எவருக்கும் தீங்கு விளைவிக்குமாயின் அல்லது சட்டத்தால் விதிக்கப்படுமிடத்து அல்லது பெயரிடப்படுமிடத்து அல்லது தொழில்முறை ஆலோசனை அல்லது மேற்பார்வை தேவைப்படுமிடத்து அவற்றை வெளியிட நேரிடும் என்பதை சேவைநாடிக்கு புரியவைத்தல் வேண்டும்.

1.3.4. சேவைநாடிகளின் விருப்பத்துடனான ஒப்புதலை பெற்றுக்கொள்ளும்போது, தொழில்வாண்மையாளர் ஒப்புதலுக்கு முன்னர் சேவைநாடிகள் அறிந்துக்கொள்வதற்கு தேவையான வகையில் நியாயமான தகவல்களை வழங்குதல் மற்றும் தகவல்களை சேவைநாடி புரிந்துக்கொள்வதற்கு முடியுமான மொழியில் வழங்குதல் வேண்டும். (4.3.1 பிரிவை பார்க்கவும்).

1.3.5. பொதுவான நடத்தைகளை பதிவுசெய்தல் தவிர்ந்து, சேவைநாடிகளின் கட்புல, செவிப்புல அல்லது புகைப்படங்கள்/காணொளிகள் அல்லது அறிக்கைகளை தயாரிப்பதாயின், குறித்த அறிக்கைகளை தயாரிப்பதற்கு முன்பாகவும் பின்னராகவும் குறித்த பதிவுகளை அணுகுவதற்கும் காட்சிப்படுத்துவதற்குமான விதிமுறைகளுக்கு எழுத்திலான அல்லது பதிவுசெய்வதற்கான முன்ஒப்புதலை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், அந்த அறிக்கையின் பிரதியினை சேவைநாடியிடம் வழங்குவதற்கு தொழில்வாண்மையாளர் (professional) நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.3.6. சேவைநாடி தொடர்பாக வாய்மொழி மற்றும் எழுத்திலான தகவல்களை அவர்களின் எழுத்திலான ஒப்புதலுடன் மட்டும் வெளியிடல் வேண்டும். அவ்வாறு இல்லை எனில் குறித்த விபரங்களை வெளியிடுவதற்கு முன்னர் அந்த நபர்களது அல்லது குழுக்களது அடையாளம் மறைக்கப்பட்டிருப்பின் மட்டும் பயன்படுத்தல் வேண்டும்.

1.3.7. வாண்மைத்துவ வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவை வழங்கும்போது, அதற்கு நேரடியாக தொடர்பு கொள்ளாத வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் பயிலுநர்கள் மற்றும் ஏனைய மூன்றாவது தரப்பினர்களின் வருகை அல்லது பங்களிப்பு என்பவற்றுக்காக சேவைநாடிகளின் இணக்கம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.



## தேர்ச்சி

வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்களது வாண்மைத்துவ திறன்கள் பராமரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல் என்பவற்றை தன்னார்வமாக மேற்கொள்ளுதல் வேண்டும். அவர்களின் தேர்ச்சி தொடர்பான வரம்புகளைக் கண்டறிந்து சுய-கவனிப்பில் ஈடுபடலாம் என்பதுடன், அவர்களால் வழங்கப்படும் பணித்தரத்தை பராமரிக்கத் தேவையான ஆதரவையும் மேற்பார்வையையும் தேவையானவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும் அவர்கள் தமது கல்வி, பயிற்சி மற்றும் அனுபவம் என்பவற்றுக்கு ஏற்ப மட்டுமே சேவைகளை வழங்குதல்வேண்டும்.

### 2.1. தேர்ச்சி வரம்புகள்

2.1.1. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்களது கல்வி/பயிற்சி மற்றும் அனுபவம் தொடர்பான வரம்புகளை அடையாளம் காணப்பட்டு கண்டுகொள்வதுடன், குறித்த வரம்புகளை மீறிச் செல்லாதிருப்பதற்கு கவனம் மனதில் இருத்துதல் வேண்டும் வேண்டும். ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவர்கள் தமது திறன் தேர்ச்சி தொடர்பாக குறை மதிப்பீடு அல்லது சந்தேகம் ஏற்படின் தமது தொழிலில் அல்லது அதற்கு புறம்பாக உள்ள தொழில்வாண்மையாளர்களுக்கு சேவைநாடிகளை வேண்டும்.

2.1.2. உடல் அல்லது உள நிலை காரணமாக வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்களது வாண்மைத்துவ தீர்ப்பு குறைபாடுடையதாக மாறுமாக இருந்தால், அவன் அல்லது அவள் அவ்வாறான எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆலோசனை செயல்முறையை மட்டுப்படுத்துவதை அல்லது இடைநிறுத்துவதை அல்லது முடிவுறுத்துவதை உறுதிப்படுத்துவதோடு, குறித்த நிலைமை தொடர்பாக உரிய வாண்மைத்துவம்சார் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

2.1.3. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள், முறையாகப் பயன்படுத்துவதற்கு தாம் பயிற்சி பெற்ற உளப்பகுப்பாய்வுச் சோதனைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

## 2.2. செயல்முறை வரையறைகள்

2.2.1. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டின் நோக்கங்களை சேவைநாடி அடைந்தபோது மேலும் இடையீடு செய்தல் ஆகாது. மேலும் நோக்கங்களை எய்திக்கொள்வதற்கு முடியாதென தெளிவாக அறியவருமாயின் தலையிடாதிருத்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் சேவைநாடியை தேவையெனில் தொடர்புடைய மற்றுமொரு தொழில்வாண்மையாளரிடம் அனுப்பிவைக்கலாம்.

2.2.2. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் உளப் பகுப்பாய்வுச் சோதனைகளின் மீது தீர்மானங்கள்$ பரிந்துரைகள் மேற்கொள்கின்ற போது அவ்வாறான பரிசோதனைகளின் வரையறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அது தொடர்பாக சேவைநாடி அறிவுறுத்தப்படல் வேண்டும்.


## 2.3. தொடர்ச்சியான வாண்மைத்துவ விருத்தி

2.3.1. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியான அடிப்படையில் நிபுணத்துவம் மற்றும் தொடர்புடைய வாண்மைத்தவ அறிவை அடைந்து கொள்வதன் மூலம் அவர்களின் தொழில் வாண்மைத் தேர்ச்சியினை பராமரித்தல் மற்றும் விருத்தி செய்தல் என்பவற்றுக்காக தன்னார்வமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2.3.2. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் தங்களது தீர்ப்பினை பாதிக்கும் மற்றும் தொழில் வாண்மைத்துவ ரீதியாக செயல்படுவதற்கான அவர்களின் ஆற்றலைத் தடுக்கக்கூடிய சூழ்நிலைகளைத் (உதாரணம் – உடல் அல்லது மன களைப்பு, அடிமையாதல் என்பன) தடுப்பதற்கு சுய- பராமரிப்பில் ஈடுபடல் வேண்டும்.

2.3.3. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகும்போது அல்லது அவர்களின் தொழில்சார் கடமைகள் காரணமாக ஆபத்தில் இருக்கும்போது ஒரு தொழில்முறை சக நண்பர்களின் அல்லது இணை நிலையினரின் உதவி மற்றும் மேற்பார்வையைப் பெற வேண்டும்.

2.3.4. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்களின் ஆலோசனை மற்றும் ஆலோசனை மேற்பார்வை ஆகிய இரண்டு பணிகளுக்கும் மேற்பார்வை பெறுதல் வேண்டும். மேற்பார்வை அமர்வுகளின் எண்ணிக்கை அவர்களின் வழிகாட்டல் அமர்வுகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக பராமரித்தல் வேண்டும்.



## வாண்மைத்துவ பொறுப்பு

வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள், சேவைநாடிகள், தொழில்முறை சகபாடிகள், அவர்கள் பணிபுரியும் மற்றும் வாழும் சமூகத்தில் நம்பகமான, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பொறுப்பான முறையில் செயல்படுவதற்கான அவர்களின் வாண்மைத்துவ பொறுப்பு தொடர்பாக மிகத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள் தீங்கு விளைவிப்பதை தவிர்க்க வேண்டுமென்பதுடன், அவர்களின் வாண்மைத்துவ செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பை ஏற்று, சிக்கல்கள் மற்றும் சங்கடங்களை நெறிமுறை ரீதியாக தீர்க்க ஒரு முறையான அணுகுமுறையை பின்பற்ற வேண்டும்.

### 3.1. பொதுவான பொறுப்பு

3.1.1. சேவைநாடிகளின் அபிலாஷைகளுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அல்லது தொழில் மீதான பொது நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தாத வகையில் வாண்மைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

3.1.2. அவர்கள் பணியாற்றும் அமைப்பின் கொள்கைகள், பிரயோகங்கள் அல்லது ஒழுங்குவிதிகள் இந்த ஒழுக்கநெறிக் கோவையின் எந்தவொரு கோட்பாடுகளுக்கும் முரணாக உள்ளதா என்பதை கண்டறிந்து உயர் அதிகாரிகளை/ சம்பந்தப்பட்ட தரப்புகளை அறிவுறுத்தல் வேண்டும்.

3.1.3. தமது தொழில்சார் சகபாடிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும். விசேடமாக அவர்களுக்கு தேவையான தொழிலுக்கு பொருத்தமான தொழில்வாண்மைத்துவ உதவி மற்றும்/அல்லது மேற்பார்வை வழங்குதல் வேண்டும்.

## 3.2. தீங்கு தடுப்பு

3.2.1. ஏதேனும் வாண்மைத்துவ செயற்பாடொன்றில் கிடைக்கப்பெறும் நலனிலும் பார்க்க அதிக தீங்கு விளைவிக்கும் என்று விளங்குமாயின் குறித்த செயற்பாட்டினை முடிவுறுத்தப்படல் வேண்டும்.

3.2.2. உளப் பகுப்பாய்வுச் சோதனைகள் தகைமை பெற்றவர்களால் மட்டும் பயன்படுத்தப்படுகிறது என்பதை சான்றுப்படுத்துவதற்கு அல்லது அவற்றின் செல்லுபடியான தன்மையை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 3.3. தொடர்ச்சியான அக்கறை கவனிப்பு

3.3.1. ஒரு சேவை நாடியை ஏதேனுமொரு நிறுவனத்திற்கு அல்லது தனிநபருக்கு பரிந்துரை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த நிறுவனத்தோடு அல்லது தனி நபரோடு வாண்மைத்தவ உறவு தொடங்கும் வரை சேவைநாடியுடன் ஒத்துழைப்பது வாண்மையாளரின் பொறுப்பாகும்.

3.3.2. வேறு வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவை வழங்குநர்களுடன் தொடர்புகொள்வது மற்றும் ஒருங்கிணைப்பது மூலம் தேவையற்ற தொழில்சார் போட்டி அல்லது எதிர் நோக்கங்களுக்காக பணியாற்றுவதனை தவிர்ப்பதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும்.

## 3.4. விரிவான பொறுப்பு

3.4.1. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்கள் மேற்பார்வை செய்கின்ற தனி நபர்களின் (உதாரணமாக (மாணவர்கள், பயிற்சிபெறுநர்கள், மேற்பார்வையாளர்கள், சகபாடிகள், ஊழியர்கள்& ஆகியோரின்) தொழில்வாண்மை செயற்பாடுகளுக்கான தார்மீகப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

கீழ் நிலை அலுவலர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அவர்களின் ஒழுக்க முறையிலான பொறுப்பு தொடர்பாக அவர்களை அறிவுறுத்தல் அந்தப் பொறுப்பில் உள்ளடங்கும்.

3.4.2. பின்னூட்டல் வழங்குவதன் ஊடாக அவர்களின் ஆக்கத்திறனான வளர்ச்சிக்கு வசதியளித்தல்.மற்றும் அவர்களின் பணி தொடர்பில் வாழ்க்கைத் தொழில்சார் வழிகாட்டல் தொடர்பாக பயிற்சி பெறுவோர் மற்றும் பயிலுநர்களின் வேலை நடவடிக்கைகளின் பொருட்டு ஆலோசனை, வழங்குவார்கள்.

3.4.3. தொழில் வழிகாட்டுதல் மேற்பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்களாக இருக்கும் போது, மேற்பார்வையாளர்கள் மற்றும் சேவைப்பெறுநர்கள் இணைந்து பணிபுரிகையில் மிக உயர்ந்த தொழில்முறை தரத்தை உறுதி செய்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆராய்ச்சியில் ஈடுபடும்போது, அதில் பங்குகொள்கின்ற தரப்புகள், எல்லா பங்கேற்பாளர்களையும் ஒழுக்க நெறிமுறைக்கமைவாக நடாத்தப்படுவதை உறுதி செய்யவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 3.5. இக்கட்டான பிரச்சினைகளை தீர்ப்பது

3.5.1. நெறிமுறை செயல்பாட்டில் சாத்தியமான பிழைகள் மற்றும் சிக்கல்களை ஆய்வு செய்வதற்கும் அவற்றின் சிக்கலைத் தீர்ப்பதற்கும் ஒரு முறைமையான செயன்முறை பின்பற்றப்பட வேண்டும்.

3.5.2. உண்மையான ஒரு தகராறு அல்லது சாத்தியமான அக்கறை தொடர்பான முரண்பாடு ஏற்பட்டால், இந்த ஒழுக்கநெறிக் கோவைக்கமைவாக அதனை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை அனைத்து தரப்பினருக்கும் தெரியப்படுத்தவும்

பொருத்தமான தீர்வைப் பெறவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## நேர்மை மற்றும் நம்பகத் தன்மை

வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் எப்போதும் நேர்மையை வெளிப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சித்தல் வேண்டும். அவர்களின் தொழில்வாண்மையின் சரியான தன்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், மற்றவர்களை நேர்மையாகவும், நேரடியாகவும், நியாயமாகவும் நடாத்துதலும் வேண்டும். அவர்கள் அக்கறை முரண்பாடுகள் தொடர்பாக உணர்ந்து, முனைப்பாக செயற்பட்டு, மற்றவர்களின் நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத்துவதையோ அல்லது கெடுதல் ஏற்படுத்துவதையோ தவிர்க்க வேண்டுமென்பதுடன், சகபாடியினரின் பொருத்தமற்ற நடத்தைகள் தொடர்பாகவும் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

### 4.1. நேர்மை மற்றும் துல்லியம் (மிகச் சரியாக இருத்தல்)

4.1.1. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் அவர்களின் கல்வி, பயிற்சி, அனுபவம் மற்றும் நிறுவனத்துடன் சரியான தொடர்பினையும் சரியாக பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

4.1.2. நிறுவனத்தால் முன்கூட்டியே ஒப்புக் கொள்ளப்பட்ட கட்டணங்கள் அல்லது நன்மைகள் இருப்பின் அது தவிர்ந்த, பாரபட்சமற்ற தன்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் பரிசுகள் அல்லது சலுகைகளை பெற்றுக்கொள்வதையோ ஏற்றுக்கொள்வதையோ செய்தலாகாது. (பிரிவு 4.3.2 ஐ பார்க்கவும்)

4.1.3. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர்கள் தங்கள் தனிப்பட்ட கருத்துக்கு புறம்பாக உள்ள உண்மையான விடயங்களை அடிப்படையாகக் கொண்ட வாய்வழி மற்றும் எழுதப்பட்ட அறிக்கைகள் குறித்து கவனம் செலுத்தல் வேண்டும். (பிரிவு 1.2.6 ஐ பார்க்கவும்)

4.1.4. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுதல் ஆராய்ச்சிகளின் பொருட்டு உங்களை அர்ப்பணித்து, அதற்கேற்ப நேர்மையான மற்றும் திறந்த ஆராய்ச்சியை நடத்தல் மற்றும் அதற்கு அவசியமான தேவைப்பாடுகள் அல்லது நிதிசார் வளங்கள், தாபனத்துடனான மற்றும் தனிப்பட்ட தேவைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெளிவாகத் தெரிவித்தல் வேண்டும்.

4.1.5. வெளியிடல் பணியில் மற்றவர்களின் பங்கேற்பு மற்றும் வெளியிடலின் நற்பெயருக்கு மதிப்பளித்து, அவர்கள் செய்த தொழில்முறை பங்களிப்பின் விகிதத்தில் அவர்களுக்கு மரியாதை அளிக்க வேண்டும்.

## 4.2. நேரடித்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை

4.2.1. சேவை நாடிகளின் சோதனைகளின் முடிவுகள் மற்றும் இடையீடுகளின் தன்மை தொடர்பாக சேவைநாடிகளுக்கு புரிந்துகொள்கின்ற வகையில் சரியான தெளிவுபடுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு சேவைநாடிகளுக்குள்ள உரிமை மதிக்கப்பட வேண்டும். (1.3.4 பிரிவை பார்க்கவும்)

4.2.2. சேவைநாடிகள் தொடர்பில் ஏதேனும் கட்டணங்கள் விதிக்கப்பட்டால், குறித்த கட்டணங்கள், சேவையின் நோக்கங்கள், இரகசியத்தன்மை, ஒருமித்த கருத்து, அனுபவம் மற்றும் சாத்தியமான விளைவுகள் போன்ற விடயங்கள் தொடர்பாக, சேவைநாடிகள் மற்றும் மேற்பார்வையாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்போது அவர்கள் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும். (பிரிவுகள் 4.1.2 மற்றும் 4.2.3 ஐ பார்க்கவும்)

## 4.3. அக்கறை முரண்பாடு (CONFLICT OF INTEREST) மற்றும் துஷ்பிரயோகம்

4.3.1. இரட்டை (ஒன்றுக்கு மேற்பட்ட) உறவுகளின் சிக்கலான தன்மை, தொடர்பாக தொழில் வழிகாட்டல் செயற்பாட்டாளர் ஆழமாக அறிந்திருப்பதோடு அவ்வாறான சூழ்நிலைகள் எப்போதும் தவிர்க்க முடியாதவை என்பதை ஏற்றுக்கொள்வார். (எடுத்துக்காட்டாக, சேவைப்பெறுநருடனான தொழில்வாண்மையான பொறுப்பு மற்றும் நிறுவனத்தின் ஊழியராக நிறுவனம் மீதான பொறுப்பு) இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழில்சார் வழிகாட்டுநர்கள் தமது விசுவாசம் தொடர்பாக சகல தரப்பினர்களுக்கும் விளக்குதல் வேண்டும். மேலும் சேவைப்பெறுநர்களின் நலன்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3.2. தமது தனிப்பட்ட அரசியல் அல்லது வணிக நலன்களுக்காகப் தொழில்சார் தொடர்புகளை பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக வழிகாட்டுதல் செயற்பாட்டாளர்கள் சேவைநாடிகளின் உணர்வுகள், பாலியல், நிதிசார் வகையில் அல்லது பிற வடிவங்களில் சேவைப்பெறுநர்களை தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். (பிரிவு 4.1.2 மற்றும் 4.2.2 ஐ பார்க்கவும்).

4.3.3. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் மேற்பார்வைகளின்போது கட்டணத்துடனோ அல்லது சுயவிருப்பத்துடனோ ஒரே தரத்திலான சேவை வழங்கப்படுதல் வேண்டும்.

## 4.4. சகபாடிகளின் செயற்பாடுகள்

4.4.1. சக செயற்பாட்டாளர்கள் நெறிமுறையற்ற முறையில் செயல்படுவது தெரிந்தால் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளில் இவ்வாறு அமையலாம், முறைசாரா (informal) வகையில் சக ஊழியருடன் பிரச்சனையை கலந்துரையாடுதல் மற்றும் அத்தகைய நடவடிக்கையை கைவிடுவாதக சக செயற்பாட்டாளரிடமிருந்து வாக்குறுதி பெறுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஒழுக்கநெறிமுறைகளுக்கு விரோதமான செயற்பாடுகள் தொடருமாயின் வாழ்க்கைத் தொழில்

வழிகாட்டல் செயற்பாட்டாளரால் சம்பந்தப்பட்ட வாண்மைத்துவ வழிநடத்தல் குழுவிடம் (Professional Steering Committee) குறித்த நிலை தொடர்பாக அறிவித்தல் வேண்டும்.

# சொற் களஞ்சியம்

**சேதம் (Damage)**
தீங்கு அல்லது சேதம்.

**தடுமாற்றங்கள்/தர்மசங்கடம் (Dilemmas)**
ஒரு பிரச்சினைக்கு பல மாற்றுத் தீர்வுகள்இருக்கும் சந்தர்பத்தில் சரியான தீர்வை தேர்ந்தெடுப்பதிலுள்ள சங்கடங்கள்

**துஷ்பிரயோகம் (Abuse)**
தகாத பயன்பாடு அல்லது சுரண்டல் (Exploitation)

**தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (Continuous Professional Development)**
தொழில்வாண்மையாளர் ஒருவரால் உரிய காலப் பகுதிக்கும், உரிய வாறும் தமது அறிவு, ஆற்றல் மற்றும் உளப்பாங்கு அபிவிருத்திக்காக மேற்கொள்ள வேண்டிய கற்கைகளில் தொடர்ந்து பங்குபற்றுதல்

**தொடர்ச்சியான பராமரிப்பு (Continuous Care)**
ஆரம்பத்திலிருந்து தமது சேவை பெறுநரை அவரது நோக்கத்தை அடையும் வரை பராமரிக்கும் செய்முறை

**தனது அடையாளத்தை மறைத்தல் (Hide Identity)**
சில நபர்கள் தமது சுயரூபத்தை மறைத்தல்

**நேர்மை (Honesty)**
நேர்மை, உண்மை உள்ள குணம்

**தவறான முறையில் பயன்படுத்தல் (Misuse)**
தவறான பயன்பாடு அல்லது சுரண்டல்

**உண்மையமான நிலை (Authenticity)**
உண்மையமான நிலை, பகட்டல்லாத

### மேற்பார்வை (Supervision)

ஒரு கனிஷ்ட உறுப்பினர்(செயற்பாட்டாளர்) ஒரு குழு அல்லது மற்றுமொரு தனிநபருடன் மேற்பார்வையாளராக பெயரிடப்படுகின்ற ஒருவர், பொதுவாக ஒரு சிரேஸ்ட அங்கத்தவர் இணைந்து செயற்படுவதற்கான உறவை ஏற்படுத்திக் கொள்ளும் செய்முறை. (அ.) மேர்ப்பார்வை செய்யப்படுபவரின் வளர்ச்சி மற்றும் விருத்தியில் மன்னேற்றம். (ஆ.) மேற்பார்வை செய்யப்படுபவரின் சேவைநாடிகளுக்கு பாதுகப்பு மற்றும் நலன்புர் சேவைகளை வழங்குதல். (இ.) மேற்பார்வை செய்யப்படுபவரின் திறன்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்

### விஞ்சுதல் (Excess)

(ஏதேனுமொரு எல்லை) விஞ்சுதல், மேலோங்குதல், அல்லது கடந்து செல்துதல்

### பொது நடத்தை (Public Behavior)

எவரேனுமொருவர் பொது மக்களின் முன்பாக நடந்து கொள்ளும் முறை

### அக்கறை முரண்பாடு /கருத்து வேறுபாடு (Conflict of interest)

இரண்டு தீவிர நிலைகள் மீது அல்லது முரன்பாடான தகவல்களை எதிர்கொள்ளும்போது ஒரு தனிநபருக்கு ஏற்படும் உளவியல் முரண்பாடு

### வெளிப்படைத்தன்மை (Transparency)

தமது செயற்பாடுகள் தொடர்பாக உள்ள வெளிப்படைத் தன்மை , மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் இல்லாமை

### உளப்பகுப்பு சோதனைகள் (Psychometric Tests)

ஒரு தனி நபரின் ஆளுமை நுண்ணறிவு மற்றும் புத்திசாலித்தனத்தை அளவீடு செய்வதற்கான கருவிகள்

### இடையீடு (Intervention)

ஒரு விடயம் தொடர்பான தீர்வைக் கொண்டு வரும் நோக்கில் இடையீடு செய்யும் யெசயல்பாடு

### இரகசியத் தன்மை (Confidentiality)
சேவைப்பெறுநரின் தனித்துவம், குணாதிசியங்களை அடையாளம் காணுதல் மற்றும் தனிப்பட்ட தொடர்புகளைப் பாதுகாப்பதற்காக தொழில்வாண்மையான செயற்பாட்டாளரின் நெறிமுறைக் கடமை

### நேரடி தன்மை மற்றும் திறந்த தன்மை (Directness and openness)
ஒருவரின் கருத்துகளை மறைக்காமல் நேரடியாகவும் தயக்கமில்லாமலும் தொடர்பு கொள்ளுதல்

### விபரமறிந்து தெரிவிக்கும் இசைவு (Informed consent)
அவர்களின் அமர்வில் பிரயோகிக்க முடியுமான செயற்பாடு அல்லது நடைமுறையின் விளைவு தொடர்பாக விடயங்கள் அல்லது அறிகுறிகளை புரிந்துக்கொள்வதற்காக சேவைப்பெறுநருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான செயன்முறை

### இரட்டை உறவு (Dual relationship)
ஒன்றுக்கு மேற்பட்ட உறவு

### விசுவாசம் (Loyalty)
நம்பகத் தன்மை, விசுவாசமாக இருத்தல்

### ஆய்வு (Research)
ஏதேனும் ஒன்று தொடர்பாக விரிவான புலனாய்வு மேற்கொள்ளுதல்

### பதிப்புரிமை (Copyright)
ஆவணம், இசை, படம் அல்லது பிற படைப்புகளை வெளியிடுதல், நகலெடுத்தல் மற்றும் விநியோகிப்பதற்கு உள்ள சட்டப்பூர்வ உரிமை

### துல்லியம் (Accuracy)
வழுக்கள் இல்லாமை, செவ்வைத்தன்மை

### தேர்ச்சி வரையறைகள் (Limitations of competence)
தேர்ச்சி தொடர்பாக ஒரு தனிநபர் கொண்டுள்ள வரையறுத்த கட்டுப்பாடு மற்றும் தலையிடும் எல்லை

**வாழ்க்கைத்தொழில் வாண்மையாளர் (Career Professional)**
ஒரு குறித்த வாண்மைத் தொழிலின் நியமங்களுக்கு உட்பட்டு அந்த வாண்மைத் தொழிலில் ஈடுபடும் ஒரு தனிநபர்

**வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் (Career Guidance)**
தரநிலைகளின் அடிப்படையில் முறையான பயிற்சிக்குப் பின்னர் தொழில்களை தெரிவு செய்தல், தொழில்களில் ஈடுபடுதல், தொழில்முறை சுய நிருணயம் என்பதில் ஆர்வமுள்ள சேவைப்பெறுநர்களின் பிரச்சினைகளை தீர்க்கப்பட்டு அது தொடர்பாக சுய தீர்மானமெடுப்பதற்காக வழங்கும் ஆலோசனை சேவை

**தொழில்சார் இணைநிலையினர்/ சக ஊழியர்கள் (Professional peers)**
ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடும் நபருக்கு இணையாக குறித்த நிறுவனத்தில் அல்லது துறையில் உள்ள இணையான தகுதி மற்றும் பொறுப்புகளைக் கொண்டுள்ள நபர்கள்

**வாழ்க்கைத்தொழில் சேவைகள் (Career service)**
தொழில் வல்லுநர்களால் நபர்கள், குழுக்கள் மற்றும் அமைப்புகள் என்பவற்றுக்கு மேற் கொள்கின்ற எல்லா சேவைகள், தொழில் ஆலோசனை, தொழில் திட்டமிடல், மதிப்பிடல், தொழில்வாய்ப்பு தேடுவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல், ஆற்றல் விருத்தி, செயலமர்வு மற்றும் பயிற்சிகளை நடாத்தல், ஒப்படைகள் வழங்குதல், நாளேடுகளை தயாரித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் அபிவிருத்திக்கு ஏற்புடையதான எல்லா சேவைகளும் ஏற்புடையதாயினும், இவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாது

**சுய நிர்ணயம் அல்லது சுய உறுதிப்பாடு (Self determination)**
நபரொருவரது வாழ்க்கையின் சுய கட்டுப்பாட்டு செயற்பாடு

**சுய அக்கறை (Self-Care)**
ஒருவரின் நல்வாழ்வையும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பதற்காக (விசேடமாக மனஅழுத்தம் உள்ள காலங்களில்) முனைப்பான கடமைகளை நிறைவேற்றும் பழக்கம்

**தனனார்வம் (Voluntary)**
சுயமாக விருப்பம் தெரிவித்தல் மற்றும் ஈடுபடல்

**தனியுரிமை (Privacy)**
ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை சூழ்நிலை அல்லது தகவல் போன்றவற்றில் அவரின் அனுமதியின்றி மற்றவர்கள் தலையிடாத நிலை

**சேவைநாடிகளின் தேவைகள் (Client requirements)**
ஒரு சேவைநாடி கொண்டிருக்க முடியுமான தொழில் தீர்மானம் எடுப்பது தொடர்பிலான பல்வேறு தேவைகள்

**சேவைநாடி (Client)**
தொழில்வாண்மையாளர்களின் சேவை அல்லது தொடர்பினை எதிர்பார்க்கும் நபர்கள்

**நேர் வரிசை முகாமையாளர்கள் (Line Managers)**
ஏதேனுமொரு செயற்பாட்டில் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள நிறைவேற்று அல்லது முகாமைத்துவ மட்டத்திலான ஊழியர்கள் அடங்கலாக ஏனைய தரங்களை மேற்பார்வை செய்கின்ற முகாமையாளர்கள். எடுத்துக்காட்டு - உற்பத்தி முகாமையாளர்கள் , நிதிசார் முகாமையாளர்கள், பயிற்சி மற்றும் அபிவிருத்தி பணிப்பாளர்கள் ஆகியோர்

**இனம் (Ethnicity)**
பொது தேசிய அல்லது கலாச்சார சம்பிரதாயங்கள் உள்ள சமூக குழுவை சாருவதற்கான நிலை

**தேசிய பிறப்பிடம் (National Origin)**
ஒரு நபர் பிறந்த தேசம் அல்லது அந்த நபரின் முன்னோர்கள் எங்கிருந்து வந்தனர் என்பது

**பரிசுகள் அல்லது சலுகைகள் (Gifts or privileges)**
விசேட நலன்கள் அல்லது அன்பளிப்புக்கள்

**பாலியல் நோக்குநிலை (Sexual Orientation)**
எவரேனுமொருவர் பாலியல் ரீதியாக கவர்கின்ற பாலினம் (பெண்/ஆண்) அல்லது பாலினம் (பெண்/ஆண் ) தொடர்பான நபரின் அடையாளம், வேற்று பாலினம் ஒரின பாலினம் போன்ற விடயங்கள்

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**
354/2, "நிபுனத பியச"(3 வது மாடி), எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி : (அலுவலகம்) +94-11-7608028
மின்னஞ்சல் : info@tvec.gov.lk